செ.வெ.எண்: 145 நாள்.14.02.2011

செய்தி வெளியீடு

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு தினசரி ஊதியம் ரூ.119/– ஆக உயர்வு**

உடல் உழைப்பை மேற்கொள்ள விருப்பமுள்ள ஒவ்வொரு ஊரகக் குடும்பத்திற்கும் ஆண்டிற்கு குறைந்தபட்சம் 100 நாட்கள் வேலை அளிக்கும் நோக்கத்துடன் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் பிப்ரவரி 2006 முதல் மத்திய அரசு தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கான செலவினை, மத்திய மற்றும் மாநில அரசுகள் 90:10 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்கின்றன. இந்தியாவிலேயே இத்திட்டத்தை மிகச்சிறப்பாக செயல்படுத்தும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை தமிழ்நாடு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது என்று உச்சநீதிமன்றம் பாராட்டியுள்ளதோடு, மற்ற மாநிலங்கள் தமிழ்நாட்டை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளது.

2. இத்திட்டத்தின் கீழ் பணி செய்யும் தொழிலாளர்கள் குறைந்தபட்ச ஊதியத்தினை பெறும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கு தமிழ்நாட்டில் தனி ஊரக விலைப் பட்டியல்கள் 2006–07 முதல் நிர்ணயிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் திருத்தியமைக்கப்பட்டு வருகிறது. உடல் உழைப்பு மூலம் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் பொதுப்பணித்துறையின் விலை விகிதத்தை விட இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் மண் வேலைகளுக்கு ஊதியம் 100 சதவிகிதம் கூடுதலாகவும், முட்புதர் அகற்றுதல் போன்ற பணிகளுக்கு 150 சதவீதம் கூடுதலாகவும் ஊரக விலைப் பட்டியல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான குறைந்தபட்ச ஊதியம் 1.10.2010 முதல் நாளொன்றுக்கு ரூ.100/– வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மைய அரசு நடப்பு ஆண்டு ஜனவரி மாதம் தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தினை நாளொன்றுக்கு ரூ.100/– லிருந்து ரூ.119/– ஆக உயர்த்தி அறிவிக்கை வெளியிட்டது. அதனடிப்படையில் தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கான குறைந்தபட்ச ஊதியத்தினை ரூ.100/–லிருந்து ரூ.119/– ஆக உயர்த்தி உத்தரவிட்டுள்ளது. இதன்படி, தொழிலாளர் ஒருவர் தற்போது செய்யும் வேலைகளுக்கு ரூ.100/–க்கு பதிலாக தினசரி ஊதியமாக ரூ.119/– என்ற விகிதத்தில் ஊதியம் வழங்கப்படும். இந்த ஊதிய உயர்வு உடனடியாக அமல்படுத்தப்படுகிறது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9